செ.வெ.எண். 58/ஜனவரி தேதி : 27.01.2017

## தருமபுரி மாவட்டம்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (27-01-2017) நடைபெற்றது.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல், வேளாண் அறிவியல் மையம், கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மை விற்பனைத்துறை மூலம் விவசாயிகள் பார்வையிடும் வண்ணம் கருத்துக்கண்காட்சியை பார்வையிட்டு பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் மானாவாரி பயிர்கள் அதிகமாக சாகுபடி செய்யும் மாவட்டம் ஆகும். தொடர்ந்து வடகிழக்கு பருவமழை குறைவின் காரணமாக பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டது. விவசாயிகளின் பல்வேறு பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதைக் குறித்து அளிக்கப்பட்ட கோரிக்கையின் தொடர்பாக அரசு வறட்சி மாநிலமாக அறிவித்ததற்காக நன்றி தெரிவிக்கப்பட்டது. வேளாண்மைத்துறை மற்றும் வருவாய்த்துறை ஒருங்கிணைந்து கண்காணித்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களை முழுமையாக கணக்கீடு செய்து நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் பால் பணம் பட்டுவாடா விரைவில் ரொக்கமாக வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். விவசாயிகளின் நேரத்தை வீணாகாமல் இருப்பதற்கு வங்கிகளில் பண பரிவர்த்தனை எளிமையாக்க வேண்டும். மேலும் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலிருந்து விரைவில் பணம் கிடைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை வைத்தனர்.

நமது மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பெற்ற பயிர் கடன் மற்றும் தேசிய மையமாக்கப்பட்ட அனைத்து வங்கிகளில் பெற்ற கடனை முழுமையாக தள்ளுபடி செய்தவற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. கால்நடைகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் தீவனங்கள் வழங்க வேண்டும். தீ மற்றும் பல்வேறு காரணங்களினால் பாதிக்கப்படும் மரங்களை வனத்துறையின் மூலம் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி காப்பாற்ற வேண்டும்.

விவசாய தொழில் சார்ந்தவர்களுக்கு முதல்வர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் நிவாரணம் ரூ. 25,000 வழங்க வேண்டும். விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்வி கட்டணம் ரத்து செய்ய வேண்டும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தேசியமையமாக்கப்பட்ட வங்கிகளில் கறவை மாடுகள் சிறப்பு திட்டத்தின் மூலம் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கிராமங்களில் இருக்கும் பண பரிவர்த்னைக்கான சேவை மையங்கள் செயல்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அருகில் சர்க்கரைப் பாகு கொட்டுவதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என மாவட்ட விவசாயிகள் அனைவரும் கோரிக்கை வைத்தனர். நமது வடகிழக்கு பருவமழை பற்றாக்குறையினால் நிலத்தடி நீர் குறைந்ததைத் தொடர்ந்து வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்கள் நெல், சோளம், ராகி மஞ்சள், தினை மற்றும் கரும்பு குறித்து கணக்கீடு செய்து அதற்கான அறிக்கையை நிவாரணம் பெறுவதற்கு அரசுக்கு அனுப்பி இருக்கிறது. தமிழக அரசு உத்தரவின்படி வறட்சியின் நிலைமை குறித்து 05-01-2017 அன்று மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர், அரசு செயலர், மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வறட்சி நிலைமை ஆய்வு குறித்த வீடியோ காட்சி விவசாயிகளிடையே காண்பிக்கப்பட்டது.

விவசாயிகள் சம்பந்தமான ஆன்லைன் பட்டா மற்றும் ஆவணங்கள் சரிபார்த்து வழங்குவதற்கு தருமபுரி மற்றும் அரூர் வருவாய் கோட்ட அளவில் ஒவ்வொரு இரண்டாவது வெள்ளிக்கிழமையில் நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு பயனடையுமாறு அறிவுறுத்தப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் படிப்படியாக வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத்துறையின் மூலம் 100 சதவீதம் கணக்கெடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. ஒவ்வொரு வியாழக்கிழமை வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெறும் கணக்கெடுப்பில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் குறைபாடுகள் குறித்து தெரிவிக்கலாம் எனவும், வருவாய் கோட்ட அளவில் ஒவ்வொரு இரண்டாவது வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கூட்டுறவுத் துறையினரும் கலந்து கொண்டு விவசாயிகளின் பயிர்கடன், பணம் பரிவர்த்தனை மற்றும் பால் பணம் பட்டுவாடா தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும், தேசிய மையமாக்கப்பட்ட வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்காக இருக்கும் ஆம்புட்ஸ்மென் போல் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் தருமபுரி – ஒரு அலுவலர் மற்றும் அரூர் – ஒரு அலுவலர் நியமித்து கூட்டுறவு தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்ய இணை பதிவாளர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு அ. சங்கர், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திரு. சேனாதிபதி, சிப்காட் பொது மேலாளர் திரு. பஷீர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி ரா.ரா. சுசீலா, தனி அலுவலர், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை திருமதி துர்க்காமூர்த்தி, தனி அலுவலர், சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை திருமதி கவிதா, முன்னோடி வங்கி மேலாளர் திரு முத்தரசு, வருவாய் கோட்ட அலுவலர், அரூர் திருமதி. கவிதா, வருவாய் கோட்ட அலுவலர், தருமபுரி திரு. ராமமூர்த்தி, உதவி பொது மேலாளர், நபார்டு திரு. பார்த்தசாரதி, வேளாண்மைத்துறை அலுவலர்களும், சகோதரத்துறை அலுவலர்களும், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.